Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10 ★★

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 8 2 66 இதழ் 360

... தை 26 ஷவ்வால் ... 16 செவ்வாய்க்கிழமை

**மில்க் வைற்**
நீல சோப்
மேல் உறைகளுக்கு
10-2-66க்குப் பின்
கலண்டர்கள்
கொடுபடமாட்டாது.

வழமைபோல் 50 மேல்
உறைகளுக்கு அழகான
சாக்குப் பை மட்டும்
இனமாகக் கொடுக்கப்படும்.

## விலை நிர்ணயம்

### அப்பியாசக்கொப்பிகளுக்

யாழ்ப்பாணம், செவ். அப்பியாசக் கொப்பிகள் மொனிடேர்ஸ் அப்பியாசக் கொப்பிகள் ஆகியவற்றுக்குரிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக அரசாங்க வர்த்தமானி அறிவிப்பு ஒன்று கூறுகிறது

# 29-வது ஷரத்துக்கு ஆபத்தா?

## தமிழரசு வட்டாரங்களில் அச்சம்

கொழும்பு, செவ்வாய்

இலங்கை அரசியல் சட்டத்துடன் ஒன்றுக்கப்பட்டிருக்கும் 29-வது ஷரத்தை இல்லாமல் செய்யும் நோக்கத்துடன் தான் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து புதிய அரசியல் சட்டம் வேண்டுமென்ற கோஷத்தைக் கிளப்பியிருப்பதாக தமிழரசுக்கட்சி வட்டாரத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த 29-வது ஷரத்து இன சமய அடிப்படையில் சிறுபான்மையினர்களாய் இருப்பவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியல் சட்டத்தில் ஒருமுக்கிய அம்சமாக இருந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அரசியல் நிலையில் திருப்பம் ஏற்படுத்தியிருப்பதுகுறித்து, தமிழரசுக்கட்சி நேற்றைய தனது அவசரக் கூட்டத்தில் ஆராய்ந்தது.

இக் கூட்டத்தில் தமிழரசின் பார்லிமெண்ட் உறுப்பினர்களும், செனட்டர்களும் மந்திரிதிருச்செல்வமும் கலந்துகொண்டனர்.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் மகாநாட்டில் சமசமாஜக் கட்சி சார்பில் கலந்து கொண்ட ஒருவருடைய பேச்சு எதிர் கட்சியினரின் அந்தரங்க நோக்கத்தை தவறுதலாக அம்பலமாக்கி விட்டதாக என்று தமிழரசு பிரமுகர் ஒருவர் சொன்னர்.

அரசியல் சட்டத்துக்கு திருத்தம் கொண்டு வருவதென்ற தீர்மானத்தை நேற்று சபைமுதல்வர் மூன்றில் இரண்டு மெஜாரட்டி பலம் கிடைக்காமல் போய்விடும் என்ற காரணத்தினுல் தான் வாபஸ்பெற்றதாக தமிழரசு எம். பி. ஒருவர் தெரிவித்தார்.

தற்போது நிலையில் அரசாங்கம் 98 வாக்குகளை தனக்கு ஆதரவாகப் பெற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கிறது. சிறுபான்மையினரின் உரிமை வழங்கும் எந்த யோசனைக்கும் எதிர் கட்சியிலிருந்து 6 பேர் ஆதரவாக இருப்பார்கள் எனவும் கூறப்படுகிறது.

## 'சமத்துவத்தை ஏற்படுத்துவதே எமது லட்சியம்'

### பாரதப்பிரதமர் இந்திரா

புதுடில்லி, பெப். 7

'சமத்துவத்தை ஏற்படுத்துவது நமது லட்சியம். குறிக்கோளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதைவிட அதை அடைவதே பிரதானம்'

இவ்வாறு பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்றுகாலை புதுடில்லியில் நடைபெற்ற தகவல் பிரசார ஊழியர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

திருமதி இந்திரா மேலும் பேசுகையில் கூறியதாவது:- மக்களின் மனப்பான்மையில் மாற்றம்தேவை. பொருளாதாரத்தை வளப்படுத்த நாம் உண்மையான முயற்சி செய்யவேண்டும். இவ்வித உண்மையான முயற்சியினுல் தான் பொருளாதாரம் விருத்தியடையும். பொதுமக்களிடம் பலவந்தமாக ஒரு விஷயத்தை வற்புறுத்துவதைவிட இதமாகச் சொல்வது நல்லது. இது நல்ல பலனை அளிக்கும்.

தகவல் பிரசாரம் நல்ல கலையென்றும் இது முறைப்படி பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் கூறினர்.

## நாவலர்சந்தி படுகொலை வழக்கு விசாரணை ஆரம்பம்

### சட்ட வைத்திய அதிகாரி சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்.

'கொலையுண்டவரின் முகத்திலும், மார்பிலும், கையிலும், ஈரலிலும் ஏராளமான காயங்கள் காணப்பட்டன. எல்லாக்காயங்களும் துப்பாக்கிச்சூட்டினுல் ஏற்பட்டவை'

நாவலர் சந்திப்படுகொலை வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது யாழ்ப்பாணம் பதில் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. சுப்பிரமணியம் சாட்சியமளிக்கும்போது மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதி யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் சுப்பிரமணியம் தெய்வேந்திரம் என்பவரை சினி இரத்தினம் என். சுப்பிரமணியம் எம். சண்முகம் ஆகியோர் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

## வியட்னமில் அமெரிக்க நிலை உறுதியானது; தளர்ந்தால் புதியயுத்தம் உருவாகலாம்

### ஹொனலுலுவில் அதிபர் ஜோன்ஸன்

ஹொனலுலு, பெப். 7

வியட்னமில் அமெரிக்கா உறுதியாக நிற்காவிடில், மற்றமொரு இடத்தில் கம்யூனிஸத்துக்கு எதிரான புதிய போராட்டமொன்றில் அமெரிக்கா இறங்கவேண்டி நேரிடும் என்று அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸன் இன்று இங்கு கூறினர்.

வியட்னம் சம்பந்தமான மகாநாட்டுக்கு வந்திருக்கும் தென்வியட்னம் தலைவர்களை வரவேற்றுப்பேசுகையில் தான் அதிபர் ஜோன்ஸன் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

வியட்னம் சம்பந்தமான இரண்டு நாள் மகாநாடு இன்று இங்கு ஆரம்பமானது

அதிபர் ஜோன்ஸ்ன் தமது வரவேற்புரையில், கம்யூனிஸ்ட் சீனவில் நடவடிக்கைகளைச் சுருக்கமாகத் தெரிவித்தார்.

"ஆசியாவில் ஆயுதம்தாங்கிய சிறுபான்மைக் குழுவினர் பெரும்பான்மையினரை அச்சுறுத்தி அடிமைப்படுத்துவதை அமெரிக்கா பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. இதற்காக பத்தாயிரம்மைல்களுக்கு அப்பாலுள்ள அமெரிக்கா. வியட்னம் ஆக்கிரமிப்பை சகித்துக்கொண்டிருப்பதிலும் அர்த்தமில்லை. வியட்னமில் கம்யூனிஸம் வெற்றிபெறுமானுல் மற்றையநாடுகளும் அதற்கு அடிமையாக வேண்டிய கட்டம் உருவாகலாம், இதனை அமெரிக்கா எப்படியும் தவிர்க்கும். கம்யூனிஸ வெற்றிக்கு அமெரிக்கா இடம் கொடுக்கமாட்டாது. தென்வியட்னம் மக்களின் சுதந்திரத்தை மற்றவர்கள் பறிப்பதை அமெரிக்கா அனுமதிக்காது. அவர்களின் கனவுகள் நனவாகவேண்டும்" என்றும் அதிபர் ஜோன்ஸன் கூறினர்.

## விமானத்தை காணவில்லை

புதுடில்லி, பெப். 7

ஸ்ரீநகரிலிருந்து ஜம்முவுக்கு இன்றுகாலை சென்ற இந்தியன் ஏயர் லைன்ஸைச் சேர்ந்த விமானமொன்று இன்னமும் திரும்பவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு வெளிநாட்டு பிரயாணிகள் உட்பட 37பேர் இதில் பிரயாணம் செய்தார்கள்.

மோசமான வானநிலைகாரணமாக ... தேடுதல்வேலை தொடரும் என அறிவிக்கப்பட்டது.

## அவசரகோரிக்கை மீது அரிசிக் கப்பல் வந்தது

### கப்பல்வருவது தாமதித்திருந்தால் அரிசிப் பற்ருக்குறை ஏற்பட்டிருக்கும்?

மாவிட்டபுரம், திங்கள்

யாழ்ப்பாணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் அவசர கோரிக்கையைத்தொடர்ந்துகொழும்பு உணவுக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் யாழ்ப்பாணத்துக்கு அரிசிக் கப்பல் ஒன்றை அனுப்பியுள்ளனர்

யாழ்ப்பாணம் துறைமுகத்துக்கு வந்திருக்கும் 'பிரஸிடென்ட் பிறிட் டோரியஸ்' என்ற இக்கப்பலில் 4,700 தொன் அரிசி உள்ளது இறக்குமதி வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. இதனை யாழ் மாவட்ட கூட்டுறவு துறைமுக தொழிலாளர் சமாஜம் கவனித்து வருகிறது.

### உரியதருணத்தில் அரிசி வந்தது

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்அரிசிப் பற்ருக்குறை நிலவியதென்றும் இந்த அரிசிக் கப்பல் இங்கு வந்திராவிடில் யாழ்ப்பாணம் மாவட்ட பாவனையாளர்களுக்கு இந்த வாரத்தில் பங்கீட்டரிசி கிடைத்திருக்காதென்றும் அறியப்படுகிறது உரிய தருணத்தில் மேற்கொண்ட நடவடிக்கை நல்லபலனை அளித்திருக்கிறதென்று சொல்லப்படுகிறது அரிசிக் கப்பல் எதுவும் கடந்த டிசம்பர் மாதம் பதினைரும் திகதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரவில்லை புகையிரத 'வாகன்'களில் அரிசி விநியோகம் செய்வதுஏற்கனவே தடைப்பட்டிருந்தால் அரிசிக் கப்பல்கள் இங்கு வராதது நெருக்கடியைத் தோற்றுவித்திருந்ததென்று அறியப்படுகிறது அரிசிக்கப்பல் இங்கு வந்திருக்காவிடில் அரசாங்கம் ஏராளமானபணம் செலவழித்து அரிசி விநியோகம் செய்யவேண்டி ஏற்பட்டிருக்கும்.

அச்சிடும் தாள்கள் முதலியன, அப்பியாசப் புஸ்தகங்கள், மலிபன் விஸ்கோத்துகள், தங்காளு தேயிலை, மற்றும் ஏக விநியோகப் பொருட்கள் எமது மொத்த விற்பனை நிலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,**
(வரையறுக்கப்பட்டது)
மொத்த விற்பனை நிலயம்,
287, ஸரன்லி ரோட், யாழ்ப்பாணம்.
1594

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

சமூகத்தில் மிகப் பலவீனமானவர்க்கும்மிகச் செல்வாக்குப்பலமுள்ளவரைப்போல் சமசந்தர்ப்பங்களிருக்கவேண்டும். அதுவே ஜனநாயகத்தைப் பற்றிய எனது கருத்து. அதில மிகத் தாழ்ந்தவரும் தமக்குச் சுதந்திரமும் சமநீதியுமிருப்பதாக உணர்வதாக இருக்கவேண்டும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 45, JAFFNA
Telegrams: EELANADU

ஈழ் பாணம் விசுவாவசு ஆண்டு தை மீ 26 உ (8-2-66)

## புதிய அரசியல் அமைப்பு

இலங்கைக்கு புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படவிருக்கிறது இப்போதுள்ள அரசியல் அமைப்புச் சரியல்லவென்பதிலும் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்பதிலும் எதிர்க்கட்சியினரும் அரசாங்கமும் கருத்தொற்றுமைப்பட்டிருப்பது நல்ல சுபசகுனமாகக் கொள்ளலாம்.

நாட்டின் அரசியல் அமைப்புத்தான் இன்றையகேடுகளுக்கெல்லாம் காரணமென்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட கருத்து. இன்றைய அரசியல் அமைப்பு இலங்கையரால் உருவாக்கப்பட்டதல்ல. பெருமனதுடன் நமக்கு விடுதலை வழங்கிய அன்னியரே நமக்கு அரசியல் அமைப்பையும் உருவாக்கித் தந்தனர். இந்த அரசியல் அமைப்பின் பலாபலன்களை சென்ற பதினேழு வருடங்களில்கண்டறிந்துவிட்டோம். இனி நமக்கென நாமே ஓர் அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டியது அவசியம்மட்டுமல்ல; நமது கடமையும் உரிமையும்கூட இன்றைய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாகவிருந்த சோல்பரிப்பிரபுகூட சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் அரசியல் நிலையைக் கண்டு, மனம் வெதும்பி ''இப்படியொரு நிலை ஏற்படுமென முன்னரே தெரிந்திருந்தால், இலங்கை அரசியல் அமைப்பில் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் விதிகளையும் சேர்த்திருப்பேனே'' என்று கூறியிருந்தார்.

இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்துவது செனட் சபையின் எதிர்கால நிலைமை, ஜனப்பிரதிநிதிகள் சபையில் நியமன அங்கத்தவர்களின் நிலை, அரசாங்க சேவைக் கமிஷன், நீதிபரிபாலன சேவைக் கமிஷன் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பது ஆகியவைகளைப்பற்றி ஆராய்ந்து அரசியல் அமைப்பைத் திருத்துவதுபற்றி சிபார்சு செய்ய தெரிவுக்குழுவொன்றை நியமிக்க வேண்டுமென்ற பிரேரணை ஜனப்பிரதிநிதிகள்சபையில் கொண்டுவரப்பட்டபொழுதுதான் அரசியல் அமைப்பையே புதிதாகத் தயாரிக்க வேண்டுமென்ற யோசனையை எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். இதை அரசாங்கமும் ஒப்புக்கொண்டது.

இலங்கையைக் குடியரசாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்பதிலும் செனட்சபை, ஜனப்பிரதிநிதிகள்சபையில் நியமன அங்கத்தவர்களின் நிலை பற்றி ஆராய்வதிலும் கருத்து வேறுபாடு இல்லை. நீதிபரிபாலன சேவையைப் பொறுத்தவரையில் அது பார்லிமெண்டுக்கும், அரசியலுக்கும் அப்பாற்பட்டதாக அமெரிக்காவில் போன்று சுதந்திரமாக இயங்க வேண்டியது அவசியம். அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் விஷயத்தில் சிறுபான்மையினர் விழிப்பாக இருக்க வேண்டும். இன்றைய அரசியல் அமைப்பில் இந்நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பளிப்பதற்கென 29-வது ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஷரத்து சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கவில்லை யென்பது கடந்தகாலச் சம்பவங்களிலிருந்து தெளிவாகிவிட்டது. என்றாலும் அது அளிக்கும் ஓரளவு பாதுகாப்பையும்கூட இல்லாமல் செய்து அந்த 29-வது ஷரத்தையே நீக்கிவிடுவதுதான் எதிர்க்கட்சியினர் சிலருடைய நோக்கம் என்பது புதிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டுமென்று கோரி அவர்கள் நிகழ்த்திய பேச்சிலிருந்து தெரிகிறது. எனவே புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும்போது ஐ. நா. மனித உரிமைச் சாஸனத்தை அடிப்படையாகக் கொண்டும், சிறுபான்மையினரின் மொழி, சமயம் ஆகியவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடியவிதத்திலும் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஷரத்துகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

இந்நாட்டின் முன்னேற்றத்தையே பாதிக்கச் செய்து, தேசிய ஒற்றுமையைச் சீர்குலைத்தமொழிப் பிரச்னைக்கு, இன்று ஓரளவு தீர்வு காணப்பட்டுவிட்டதாகக் கூறப்படினும் எல்லோருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய முறையில் மொழிப்பிரச்னைக்குத் தீர்வுகாணப்பட்டுவிடவில்லை. மொழிப் பிரச்னை மட்டுமல்லாது தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி நாட்டை முன்னேற்றுவதற்குத் தடையாக இருக்கும் எந்தத் தேசியப் பிரச்னைகளுக்கும் இன்னும் நிரந்தரமான தீர்வு காணப்படவில்லை. புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பொழுது, அடுத்த தேர்தலைப்பற்றிய அக்கறையை விடுத்து நாட்டின் எதிர்காலத்தைப்பற்றிய சிந்தனையோடு ஈடுபட வேண்டும்.

''இலங்கை, ஆசியாவின் சுவிட்சர்லாந்தாக விளங்கவேண்டும்'' என்று காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா பல தடவைகளில் குறிப்பிட்டிருக்கிறார். சுவிட்சர்லாந்து அமைதியாகவும், சென்ற இரு உலக மகா யுத்தங்களில் சம்பந்தப்படாமலும் உலகுக்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவதற்கு, அந்நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழக்கூடிய முறையில் அந்நாட்டின் அரசியல் அமைப்பு இருப்பதுதான் காரணம். அந்நாட்டுத் தலைவர்களும், மக்களின் பிரதிநிதிகளும் காட்டிய அரசியல்ஞானத்தை எமது நாட்டுத் தலைவர்களும் மற்றையோரும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதில் காட்ட வேண்டும். பண்டாரநாயக்கா காட்டிய வழியைப் பின்பற்ற விரும்புவோர் இவ்விஷயத்திலும் பின்பற்றினால் பண்டாரநாயக்கா கனவு கண்டது போன்று 'இலங்கை ஆசியாவின் சுவிட்சர்லாந்'தாக விளங்க முடியும்.

இலங்கைக்கு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கவிருக்கும் எமது தலைவர்கள், உண்மையான ஜனநாயகத்தையும் மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழ்வதற்கும் வழி காட்ட வேண்டும். அடுத்த தேர்தலைப்பற்றியும் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றுவதற்குக் குறுக்கு வழி என்ன என்பதுபற்றியும் இன்றுபோல் சிந்தனை செய்து கொண்டு புதிய அரசியல் அமைப்பையும் தயாரித்தால் இலங்கைக்கு மீட்சியே இல்லாது போகும். அரசியல் அமைப்பையே மாற்றுவதற்கு எதிர்க்கட்சியினரும் அரசாங்கமும் காட்டும் ஒற்றுமை நாட்டின் வாழ்வையே புதிய வழியில் ... இருக்க வேண்டும்.

# சுவிட்ஸர்லாந்து அரசியல் அமைப்பு

## சிறுபான்மையினருக்கும் சமமான உரிமைகள்

இலங்கை 'ஆசியாவின் சுவிட்ஸர்லாந்து' ஆகவேண்டும் என்று பிரதமர் பண்டாரநாயகா பன்முறை கூறியிருக்கிறார். இலங்கைக்கு சுவிட்ஸர்லாந்தின் அமைப்புப் போன்ற திட்டம் வகுக்கவேண்டுமென்றும் அதையே தாம் ஆதரிப்பதாகவும் ஒரு பிரிட்டிஷ் பத்திரிகைக்காரரிடம் அவர் கூறினார். இச்சமயத்தில் சுவிட்ஸர்லாந்தின் அரசியலமைப்பு விஷயங்களைத் தெரிந்துகொள்வது நல்லதென்று கருதி, அது பற்றி மூன்று கட்டுரைகளை வெளியிடுகின்றோம். அதில் முதல் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

சுவிட்ஸர்லாந்து இலங்கையைவிடச் சிறியநாடாகும். இலங்கையின் விஸ்தீரணம் ஏறத்தாழ 25 ஆயிரம் சதுர மைல். சுவிட்ஸர்லாந்தோ 16 ஆயிரம் சதுர மைல்தான். அதாவது இலங்கையின் அளவிலே மூன்றில் இரண்டு பங்கு குறைவாகும்.

இலங்கையின் மொத்த ஜனத்தொகை 120 லட்சம். சுவிட்ஸர்லாந்தின் ஜனத்தொகையோ 50 லட்சம் தான். ஐரோப்பாவின் மத்திய பாகத்திலுள்ள சுவிட்ஸர்லாந்து அல்ப்ஸ் மலைப் பிராந்தியத்திலுள்ளதுகடல் சம்பந்தமே இல்லை. வடக்கே ஜெர்மனி, மேற்கே பிரான்ஸ், தெற்கே ஆஸ்திரியா. இந்த நான்கு நாடுகளாலும் சூழப்பட்ட இந்தச் சிறிய நாடு, 22 கான்டன்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

அமெரிக்காவிலுள்ள மாகாணங்களெல்லாம் செயற்கை எல்லைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சுவிஸ் 'கான்டன்கள்' அப்படியல்ல. மலைகள், ஏரிகள் முதலிய இயற்கை எல்லைகள் அவற்றைப் பிரிக்கின்றன.

நான்கு பெரிய நாடுகள் அந்நாட்டிலுண்டு. அவற்றில் ஆரிச் என்ற நகரமே மிகப்பெரியது. 4,28000 பேர் அதில் வசிக்கின்றனர் மற்றப்படி பாஸில்ஸ், ஜெனிவா, பொன் முதலிய மூன்று நகரங்களிலும்தான் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர் கடைசியாகக் குறிப்பிட்ட பெர்ன்தான் சுவிட்ஸர்லாந்தின் தலைநகர். சமஷ்டி அரசாங்கத்தின் தலைமைப்பீடம் அங்குதான். சமஷ்டி அரசாங்கக் காரியாலயங்கள் அனேகமாக அங்குதான் உள்ளன. ஆனால் சமஷ்டி உயர் நீதிமன்றம் மட்டும் லாஸேன் நகரிலுள்ளது.

மொத்தம் நான்கு மொழிகள் பேசப்படுகின்றன. நூற்றுக்கு 73 பேர் வீதம் ஜெர்மனி பேசுபவர், பிரெஞ்சு 21%, இத்தாலி 6%, ரோமன் 1% ஜெர்மன் சுவிஸ்கள் மேற்கிலும், இத்தாலிய ஸ்விஸ் தெற்கிலும் வசிக்கின்றனர். ரோமான்ஸ் என்பது லத்தீனிலிருந்து வந்தது. நாட்டிலே பல பள்ளத்தாக்கிலுள்ள கிராமங்களில் அம்மொழி பாதுகாக்கப்பட்டுவருகிறது. ஜனத்தொகையில் 100-க்கு 57 புரொட்டஸ்தாந் கிறீஸ்தவர்கள் (ஸ்லிஸ்லியன், கால்வினிஸ்ட்), 41% ரோமன் கத்தோலிக்கர்.

சுவிஸ்அரசாங்கம் 1921-ம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. ஆஸ்திரிய ராஜகுடும்பத்தை எதிர்க்க ஊரிஸ், சுவிஸ், அண்டர்வால்டன் என்னும் ஊர்களைச் சேர்ந்த மக்கள் கூட்டுப பாதுகாப்புச் சங்கமாகச் சேர்ந்தனர். நெப்போலியன் காலத்தில் சுவிட்ஸர்லந்து ஒரு பிரெஞ்சு பாதுகாப்பு நாடாக இருந்தது அதற்குப் பிறகு சுவிட்ஸர்லாந்து ஒரு சுதந்திர கூட்டு அரசாங்கமாக மாறியது ஒவ்வொரு காண்டனையும் சேர்ந்தவர்கள் அதிக அரசியல் சுதந்திரம் கேட்டனர். இதுபற்றி உள்நாட்டு 'இரத்தமில்லாத சண்டை' நடந்தது. மதம், இனம் முதலிய வேற்றுமைகள் எல்லாம் அடிபட்டன. முதலில் முற்போக்குச் சக்திகள் சேர்ந்து 1848-ம் ஆண்டு சமஷ்டி அரசியல் அமைப்புத்திட்டத்தை வெற்றிகரமாக ஏற்படுத்தின. இது படிப்படியாக நயன குடியரசாக உருப்பெற்று இரு உலக அக்கினியிலும் சிக்காமல் தப்பி முன்னேறிவருகின்றது.

விவசாயமே முக்கிய தொழிலாக இருந்த சுவிட்சலந்தில் முன்னர் கூலிப்பட்டாளத்து ஆட்களை ஏற்றுமதிசெய்துவந்தனர். பின்னர் அது கைத்தொழில் நாடாக அபிவிருத்திஅடைந்தது. யந்திரங்கள், கடிகாரங்கள், புடவைகள் ஓட்... கள், மருந்துவகைகள் முதலியவை பெரிதும் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. மக்களில் நான்கில் ஒரு பங்கினர் சொந்தத்தில் ... கமம் செய்கின்றனர். பசுப்பண்ணை மிகவும் லாபகரமாக நடந்தது. பால் வகைகள் அதிகமாக ஏற்றுமதியாகின்றன. கைத்தொழில்களுக்கு மூலப்பொருட்கள் இறக்குமதியாகின்றன. சுவிட்சலாந்துக்குக் காலனிகள் எதுவும் கிடையா. அதற்கான முயற்சியும் செய்யவில்லை.

பொதுவாகத்தொழிலாளரின் வாழ்க்கைஅந்தஸ்து மற்ற நாடுகளிலுள்ளதை விட மேலானது. பல சமூக திட்டங்கள் தொழிலாளரின் நல உரிமைகளைப் பாதுகாக்கின்றன. இன்னும் பல சமூகசேவைத் திட்டங்கள் உருவாகின்றன.

சுவிட்ஸலாந்து ஐரோப்பாவிலேயே பழைய குடியரசாகும். நாட்டிலுள்ள ஒவ்வொரு மக்களுக்கும் அரசியல் நிர்வாகத்தில் பொறுப்பளிக்கப்படுகின்றது. ஒரு அரசனிடமோ அல்லது தெரிவு செய்யப்பட்ட சிலரிடமோ அதிகாரம் ஒப்படைக்கப்படவில்லை. முக்கிய விஷயங்களெல்லாம், சர்வஜன வாக்கெடுப்பின் மூலமே நிர்ணயிக்கப்படுகின்றது. இப்போதுள்ள சமஷ்டிஅரசியல் 1874-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. மொத்தம் 22 கான்டன்கள் உண்டு. ஒவ்வொரு காண்டன் அல்லது மண்டலத்திலும்தனிச்சட்டசபையுண்டு. சுயாட்சி உரிமைகள் அதற்கு ஆதிமுதல் இருந்துவருகின்றன. மொழி இனம் முதலிய சிறுபான்மைச் சமூகங்களுக்கு அடிப்படையிலேயே சட்டபூர்வமாகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுவருகின்றது. இதனால் பல மொழிகள் பேசும் சமூகங்களுக்கிடையில் நல்லுறவு இருக்கமுடியாது. சில கான்டன்கள் அல்லது மண்டலங்களில் பல்வேறு மொழி பேசுபவர் கலந்து வாழ்கின்றனர். உதாரணமாக கிரிஸானில், ஜெர்மன் இத்தாலியன், ரோமானிஷ் மொழி பேசுபவர்களும், பெர்ன், பிரீபோக், வாலே இக்கான்டன்களில், ஜெர்மன், பிரெஞ்சு மொழி பேசும் சமூகத்தினருள் கலந்து வாழ்கின்றார்கள். இங்கு மொழி காரணமாகச் சச்சரவு ஏற்படுவதில்லை. ஒவ்வொரு காண்டனும் பல விஷயங்களிலும் சுதந்திர உரிமைகளுடன் திகழ்கின்றன. சிறுபான்மை சமூகங்களுக்கு சமஉரிமைகள் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளன. பள்ளிக்கூடங்களிலும், அரசாங்கங்களிலும் தங்கள் தாய்மொழியை பாவிக்கலாம்.

சமஷ்டிமுறை காரணமாக அங்கு சமய அமைதியும் நிலவமுடிகின்றது.

(வளரும்)

## அன்னைசாரதாதேவி நூல்கள் அன்பளிப்பு

பருத்தித்துறை, திங்.

அன்னை சாரதாதேவியாரின் 113-வது பிறந்த தினத்தையொட்டி அன்னாரின் வாழ்க்கை உபதேசங்கள் அடங்கிய பல நூல்களை வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி நூல்நிலையத்துக்கு அன்னை சாரதாதேவி பிறந்த தினக் கொண்டாட்ட விழாக்குழுவினர் வழங்கினர்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் எழுதப்பட்ட இந்த நூல்களை விழாச்சபையினரிடம் இருந்து கல்லூரித் தலைவி செல்வி கே. சரவணமுத்து பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "லூனா-9" நகருகிறது?

## ஏதோ மர்மம் நடைபெறுவதாக ஜோர்டல் பேங்க் அறிவிப்பு

லண்டன், பெப். 7

சந்திர மண்டலத்திலுள்ள 'லூனா-9' விண்வெளி நிலையத்தைச்சுற்றி 'ஒரு மர்மம்' தொடர்கிறதென்று பிரிட்டனிலுள்ள ஜோர்டல் பேங்க அவதான நிலையத்தின் டைரக்டர் தெரிவித்துள்ளார்.

'லூனா 9'-ன் வேலை பூர்த்தியடைந்துவிட்டதென்று சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' அறிவித்திருந்தது. ஆனால் இதற்குமாறாக 'லூனா 9' நகர்ந்துகொண்டிருக்கிறதுஎன்று ஜோர்டல் பேங்க் அவதான நிலைய டைரக்டர் அறிவித்துள்ளார்.

மாஸ்கோ டெலிவிஷனில் நேற்று மற்றுமொரு புதிய சந்திரமண்டலப்படம் காண்பிக்கப்பட்டது. இந்தப் படத்தில்மலைகளும் விண்வெளிக் கப்பல்களின் சிதைந்த பாகங்களும் காணப்பட்டன.

இதற்கிடையில் பிரிட்டனிலுள்ள வானொலி தொலைநோக்கி மேலும் பல படங்களைப் பிடித்திருக்கிறது. இந்தப்படங்கள்சிறிது தரம் குறைந்ததாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனிலுள்ள ஜோர்டல் பேங்க் அவதானநிலையம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறதென்றும் 'லூனா 9' விருந்து மேலதிக படங்கள் கிடைக்கலாமென்று இவர்கள் எதிர்பார்ப்பதாகவும் தெரியவருகிறது.

# கியூபாவை சீனு அவமானப்படுத்துகிறது

## பிரதமர் காஸ்ட்ரோ குற்றச்சாட்டு

ஹவானா, பெப். 7

கியூபாவை அவமானப்படுத்துவதில் கம்யூனிஸ்ட் சீனு ஈடுபட்டிருக்கிறது என்று கியூபா பிரதமர் திரு. பிடல் காஸ்ட்ரோ குற்றம் சுமத்தியுள்ளார்.

கியூபாவுக்கு எதிராக கம்யூனிஸ்ட்சீனு மேற்கொண்டுள்ள அவமானமான நடவடிக்கைகள் குறித்து கியூபா கம்யூனிஸ்ட் பத்திரிகை ஒன்றில் பிரதமர் பிடல் காஸ்ட்ரோ அறிக்கையொன்று வெளியிட்டுள்ளார். இந்த அறிக்கையில் சீனுவின் பிற்போக்கான' செயல்கள் பற்றி விபரித்துள்ளார்.

'சீனு, கியூபாவுக்கான தனது அரிசி ஏற்றுமதியை வெகுவாகக் குறைத்திருக்கிறது. இதற்கான உண்மைக் காரணம் அரசியல்தான்.

கியூபாவுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகளிலும்பார்க்க சீனு பிற்போக்கான மோசமான நடவடிக்கைகளைக் கைக்கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

## தலைமறைநாகரை இந்திரா சந்திப்பார்

புதுடில்லி, பெப் 7

தலைமறைவு நாகர்கள் பிரதிநிதிகள் கோஷ்டியைத் தாம் விரைவில் சந்திக்க இருப்பதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

தலைமறைவு நாகர்கோஷ்டியைச் சந்திக்கத்தாம் ஆவலாக இருப்பதாகவும் அவர்களும் தம்மைச் சந்திக்க ஆவல் கொண்டிருப்பதாகவும் திருமதி இந்திரா கூறினார்.

இச்சந்திப்புக்கான திகதி சில தினங்களில் வெளியிடப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

## தடை

லாகூர், பெப். 7

நேற்று இங்கு ஆரம்பமான கிரிக்கட் சிகவின் தேசிய மகாநாட்டு விபரங்களை வெளியிடுவதை மேற்குப் பாகிஸ்தான் அரசாங்கம் தடைசெய்துள்ளது.

(பி. டி. ஸி.)

## மதுரை பல்கலைக்கழகம்

மதுரை, பெப். 7

மதுரை பல்கலைக்கழகம் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

## சைவபரிபாலனசபை பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை 1965-ம்ஆண்டு நடாத்திய சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சை முடிவுகள் வருமாறு:-

**சைவப்புலவர்**

பின்வருவோர் 2-ம் பிரிவில் சித்தியெய்தியுள்ளனர்:

இ செல்லத்துரை கரவெட்டி. ச மரகதவல்லி திருநெல்வேலி யாழ்ப்பாணம், சு செகசோதியம்பாள் கைதடி, க பாக்கியம் வாணி கலைக்கழகம் கரவெட்டி, சி இலக்குமிதேவி வா க க, சி பத்தினிப்பிள்ளை வா க க, சி மகாலிங்கம் வா க க, பொ மாணிக்கவாசகர் வா க க, க வசந்திராசா வா க க, அ ஸ்ரீஸ்கந்தராசா, வா க க, நா சோமசுந்தரம் நயினாதீவு சி பத்தினியம்மா வாணி கலைக்கழகம், வெ சாந்தநாயகி வ க க, வே. சண்முகலிங்கம் ஏழாலை மேற்கு, சி பொன்மணி ஏழாலை தெற்கு, வ சின்னமணி வாணி கலைக்கழகம்.

நூனசித்தி பூர்த்திசெய்தியவர்- வல்லிபுரம் பொன்னம்மா வாணிகலைக்கழகம்.

**இளஞ்சைவப்புலவர்**

சிதம்பரப்பிள்ளை வேலாயுதம் (இரண்டாம் பிரிவு) கரவெட்டி கிழக்கு. வ. பரமலிங்கம் (முதலாம்பிரிவு) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சுவாமிஐயர் பஞ்சாட்சரஐயர் (இரண்டாம் பிரிவு) யாழ்ப்பாணம்.

லண்டன், பெப். 7

ஈராணிய அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்ததாக 55 பேர்மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இராணுவ நீதி மன்றத்தில் இன்று ஆரம்பமானது.

## ஜப்பானிய விமான விபத்து

### சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன

டோக்கியோ, செப். 7

கடந்தவாரம் விபத்துக்குள்ளான விமானத்தின் சிதைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

விமான விபத்தில் உயிரிழந்த 133 பேரில் எவருமே உயிர்பிழைக்கவில்லை. 33 சடலங்கள் மட்டும் இதுவரை மீட்கப்பட்டிருந்தன.

விமானத்தின் சிதைவுகளில் ஏராளமானவர்களின் சடலங்கள் அகப்பட்டிருக்கலாமென்றுகருதப்படுகிறது. மீட்பு வேலைகள் இன்றுநடைபெறவிருக்கின்றன.

# உலக ஜனத்தொகை 330 கோடி!

## 1965-ல் பிறப்பு: 12 கோடி இறப்புவிகிதம்: 6 கோடி

வாஷிங்டன், பெப். 7

உலகின் ஜனத்தொகை 330 கோடியே 80 லட்சமாக உயர்ந்திருக்கிறதென்று இங்குள்ள ஜனத்தொகை புள்ளி விபரப் பகுதியின் அறிக்கையொன்று கூறுகிறது. உலகின் ஜனத்தொகை இந்த விதமாக அதிகரிக்குமானல் இரண்டாயிரம் வருடத்தில் உலகின் ஜனத்தொகை எழுநூறு கோடியாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் புள்ளி விபரங்களை வெளியிட்ட ஸ்தாபனம் ஒரு அரசாங்கப் பற்றற்ற ஆராய்ச்சி நிலையமாகும்.

ஜனத்தொகை அதிகரிப்பைப் பொறுத்தமட்டில் லத்தீன் அமெரிக்க நாடுதான் முன்னணி வகிக்கிறதென்றும், ஆபிரிக்காவும் ஆசியாவும் இரண்டாவது மூன்ருவது இடத்தைப் பிடித்திருக்கின்றனஎன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 1965-ம் ஆண்டு நடுப்பகுதிவரை மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரங்களின்படியே உலகின் ஜனத்தொகை மதிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்படுவதாவது:

1965-ம் ஆண்டில் உலகில் சுமார் பன்னிரண்டு கோடியே ஐம்பது லட்சம் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இறந்தவர் தொகை ஆறுகோடியாகும்.

## ஹொனலுலு

வாஷிங்டன், பெப். 7

வியட்னும் நெருக்கடிபற்றிய ஹொனலுலு மகாநாடு இன்று ஆரம்பமானது. இம் மகாநாட்டில் தென்வியட்னும் தலைவர்கள், அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் கலந்து கொள்கின்றனர்.

## கி. ச. தலைவர் தெரிவு

வவுனியா, திங்கள்

மாந்தை தெற்கு, மாந்தை வடக்கு கிராம சபைகளின் தலைவர்கள் தெரிவு இம்மாதம் 11-ந் திகதி நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மாந்தை மேற்கு கிராமசபையின் நிர்வாகப் பொறுப்பை வவுனியா மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் இம்மாதம் 1-ந் திகதியிலிருந்து ஏற்றுள்ளார்.

## பட்டினசபையின் புதிய தலைவர்

வவுனியா, திங்கள்

முல்லைத்தீவு பட்டினசபையின் புதிய தலைவராக திரு. அந்தோனிப்பிள்ளை சந்தியாபிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒரு மாத காலத்துக்கு முன்னர் திரு. அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை தமது தலைவர் பதவியை ராஜினுமாச் செய்ததைத் தொடர்ந்து மேற்படி பதவி காலியாகவிருந்தது.

## "ஜனநாயக கட்சி நிறுவப்பட்டுள்ளது"

திருமலை, திங்கள்

"கடந்த 18 ஆண்டு காலமாக பகிஷ்கரிப்பு மூலம் துக்கதினம் கொண்டாட முன்வந்துள்ளதன் காரணம் உரிமைகோரியமக்களை உதாசீனம் செய்துகொடுங்கோல் ஆட்சி புரிந்தவர்களின் கொட்டம் அடக்கப்பட்டு ஜனநாயக ஆட்சி இங்கு நிறுவப்பட்டதே." என்று வெள்ளமணல் பாடசாலையின் ஆசிரியர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட சுதந்திரதின விழாவில் குடாக்கரை கிராமசபைத் தலைவரும், கிண்ணியா, யு. என். பி. கிளைத்தலைவருமான ஜனுப் கே. ஜெயினுதீன் பேசும்போது கூறினர்.

கூட்டத்திற்கு வெள்ளமணல் பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஜனுப் வி எம். இம்பருகீம் தலைமை வகித்தார். ஜனுப் ஜெயினுதீன் தொடர்ந்து பேசுகையில், மாஜி பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, தன் கணவனின் கொள்கைப்படி நடப்பேன் என்று மக்களிடையே உறுதியும் அவர் காலக்கிரகத்தில் அக்கொள்கைகளை மாற்றிக் கொண்டு பாக்ஸீயவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்ததால் அக்கொள்கைகளை மக்கள் பெறுத்தொதுக்கினர் என்ருர்.

திருவாளர்கள் எம். எம். எம். கரீம், பி. ஏ. கமீத், ஜே. எலியாஸ், யூ. எல் ஏ. வகாப், ஏ. ஏ. சலாம், ஏ. எல். சாலிகீன் ஆகியோரும் பேசினர்.

ஆரம்பத்தில் மாணவ, மாணவிகளின் அணிவகுப்பு நடைபெற்றதுடன் தேசிய கீதத்திற்கிடையே பாடசாலைத்தலைமையாசிரியர் ஜனுப்வி எம் இப்ருகீம்தேசீய கொடியை ஏற்றிவைத்தார். அன்று மத்தியானம் மக்குலூத்து பள்ளிவாசலில் விசேஷ தொழுகையும் பிரார்த்தனையும் நடத்தப்பட்டன. இவ்வைபவத்தில் பெருந்தொகையான முஸ்லிம்கள்கலந்து கொண்டனர்.

# நீச்சல் பயிற்சி பெறும் மூன்று வயதுக் குழந்தை



தண்ணீரில் இறங்குவது என்ருல் பெரியவர்களிலேயே பலருக்குப் பயம். ஆனுல் மூன்றுவயதுக் குழந்தை இதோ மல்லாந்து படுத்து லாகமாக நீந்துகிறது. இதன் தாய் திருமதி மார்கிரட் யேட்ஸ் பிரிட்டனில் உள்ள நீச்சல் போதனாசிரியர்களில் ஒருவர். தாயின் கலைத் திறமை குழந்தையின் கருவிலேயே அமைந்துவிட்டது போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு வாரண்ட் உத்தரவு

மாவிட்டபுரம், திங்கள்

மல்லாகம நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு வடிசாராய வழக்கில் சாட்சியமளிக்கவிருந்த இருபொலிஸ் கான்ஸ்டபிள்கள் கோர்ட்டிற்கு வராமையால் அவர்களுக்கு எதிராக மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஆர். கண்ணுத்துரை வாரண்ட் உத்தரவுபிறப்பித்துள்ளார்.

இவ்வழக்கில் தெல்லிப்பழை கட்டுவனைச் சேர்ந்தவர்களான சின்னத்தம்பி தங்கராசா அவரின் மனைவியான அன்னலட்சுமி ஆகிய இருவரும்சட்டவிரோதமாக 216 ரும் வடிசாராயம் வைத்திருந்ததாக காங்கேசன்துறைப் போலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

வழக்கு மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஆர். கண்ணுத்துரை முனிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவ் வழக்கில் முக்கிய சாட்சிகளும் பொலிஸ் கான்ஸ்டபிள்களுமான அமரதுங்காவும், பீரிஸும் கோர்ட்டிற்கு வரவில்லையென்பது நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இதனால் நீதிபதி அவர்களுக்கு எதிராக வாரண்ட் உத்தரவு பிறப்பித்து வழக்கை அடுத்தமாதம் 17-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு ஆர். ஜே. செவரத்தினம் ஆஜராஞர். பொலிஸ்தரப்பில் சப்இன்ஸ்பெக்டர் திரு. இராசநாயகம் ஆஜராகியிருந்தார்.


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
**ஆலய மணி**
தமிழ்
தினசரி 4-15க்கு மட்டும்
**குறாக்ஸ் அனோனிமஸ்**
(ஆங்கிலம்)



**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி-6-30, 9 30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
ஜெமினி - சாவித்திரி
நடித்த
**கற்பகம்**



**REGAL—JAFFNA**
**NOW SHOWING**
Jeffrey Hunter
Mylene Demongeot
in
**Gold for the Caesars**
(EastmanColor)


## பிணையில் விடுதலை

திருகோணமலை, திங்கள்

மூதூர் முதலாவது எம். பி ஜனுப் முகமதலிக்குச் சொந்தமான தண்ணீர் கொதிக்கவைக்கும் கடாரம் ஒன்றை களவாடியதாகக் குற்றஞ்சாட்டி ஜே. சராப்தீன் என்பவர்மீதும் களவாடப்பட்ட அப்பொருளை வைத்திருந்ததாக எம். சி எல். அப்துல் மஜீத் என்பவர் மீதும் சீனன் வாடிப்பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு திருமலை மாஜிஸ்திரேட் திரு சிறிமேவன் அமரசிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்களிருவரும் தலா 250 ரூபா பிணையில் விடப்பட்டதுடன் நீதிபதி விசாரணையை இம்மாதம் 16-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.


**இப்பொழுது திரையிடப்படுகிறது**

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | நவா (கொம்பனித்தெரு) | விஜயா (மட்டக்களப்பு) |
| மொடேர்ன் (பண்டாரவளை) | மொடேர்ன் (பதுளை) | விஜிதா (அட்டன்) |
| தீவொளி (நூரளை) | கல்யாணி (நாவலப்பிட்டி) | சந்தியா (கம்பளை) |



**பூம்புகார்**
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜ்ஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்து
அனைவரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஓவியம்.



**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
எம். ஜி. ஆர். -- சாவித்திரி
நடித்த
**வேட்டைக்காரன்**


## இளவாலை கொலை வழக்கு

மாவிட்டபுரம், திங்கள்

இளவாலையைச்சேர்ந்த வீரகத்தி கணபதிப்பிள்ளை என்பவர் சென்றவருடம் அக்டோபர் மாதம் 29-ம் திகதி தனது மனைவியான சங்குபதியைக் கொலைசெய்ததாக சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ் எச். அத்துறுபாஞ முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பேதுறுரேக்கு சாட்சியமளித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது: நான் கடந்த அக்டோபர் மாதம் 30-ம் திகதி காலை பத்து மணியளவில் சுளிபுரத்திற்குச் சென்றேன். செல்லும் வழியில் பலர் கூட்டமாக நின்று கதைத்துக் கொண்டு நின்ருர்கள். அவர்களில் ஒருவர்; ''ஒருவர் தனது மனைவியை அடித்துக் கொலை செய்துவிட்டார்'' என்றுகூறியது எனது காதில் கேட்டது. நான் அதைப் பற்றிக் கவலைப்படாமல் சுளிபுரம் போய்விட்டு மூன்றரை மணியளவில் திரும்பிவந்தேன். வந்தபொழுதும் பலர் இதேமாதிரிக் கதைத்தார்கள். நான் அதைப்பற்றிக் அறிவிப்பதற்காக கிராமசேவகரின் வீட்டிற்குச் சென்றேன் அவர் அங்கு இல்லை இரண்டாம் முறையும் சென்றேன். அப்போதும் அவர் அங்கு இல்லை. நான் அங்கிருந்து திரும்பி வரும்பொழுது பஸ்தியாம்பிள்ளை என்பவரை வழியில் கண்டேன். நான் அவரிடம் கேள்விப்பட்டதையும் கிராமசேவகர் வீட்டிற்கு இருதடவை சென்றதையும் கூறி அவரை கிராமசேவகரிடம் சென்று அறிவிக்கும்படி கூறினேன். எதிரிதான் அவருடைய மனைவியைக் கொலைசெய்ததாக என்னிடம் ஒருவரும் கூறவில்லை.

நீதிபதி மேல் விசாரணையை ஒத்திவைத்தார். எதிரிதரப்பில் வழக்கறிஞர் ஆர். செல்வரத்தினம் ஆஜராஞர். சங்கானை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ் வழக்கை நடத்திஞர்.




## கொழும்பு

செவ்வாய் 8-2-66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 தேர்ந்தஇசை. 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை, 7-15 [illegible] ரம், 7-30 பஞ்சபாணம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதஸ்வரம், 10-00 நேயர்விருப்பம்.

# தமிழ்ப் பகுதிகளில் சுதந்திரதின கொண்டாட்டம்

### பருத்தித்துறையில்

சுதந்திர தினத்தன்று பருத்தித்துறையில் உள்ள இந்துக்கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகியவற்றில் விசேஷ பூசைகள் நடைபெற்றன. அதை அடுத்து பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் காரியாதிகாரி திரு. விசுவநாதனல் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. பாடசாலை மாணவிகள் தேசியகீதம் பாடினர். அதன்பின் பொலிஸ் விளையாட்டு வீரர்களுக்கும் பருத்தித்துறை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப்போட்டியில் பருத்தித்துறை விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது. பாடசாலைகளின்கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

### நெடுந்தீவில்

நெடுந்தீவில் இம்முறை மிகவும் கோலாகலமான முறையில் மக்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடினர்கள். அதிகாலை 6 மணிக்கு தேவாலயங்களில் பூசைகளும் மணி ஓசைகளுமாக இருந்தன. காலை 8 மணிக்கு வாணவெடிகளும் கரகோஷங்களும் தொடர தேசியக் கொடியை நெடுந்தீவு காரியாரி திரு. எம். சுப்பிரமணியம் அவரின் கந்தோரில் ஏற்றிவைத்தார். மாணவர்கள் சேசியகீதம் பாடினர். மாலையில் விசேட நிகழ்ச்சியாக இருந்த விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

### ஊரெழுவில்

ஊரெழு கிராம அபிவிருத்திச்சங்க ஆதரவில் நடைபெற்ற சுதந்திரதின விழாவுக்கு வலி. கிழக்கு காரியாதிகாரி திரு. எஸ். வேதாரணிய சேயோன் தலைமைவகித்துப் பேசுகையில் ''தேசிய ஒற்றுமையைக் கண்டு இலங்கை மக்கள் இன்று களிப்படைகிருர்கள். இந்த நல்லெண்ணத்துடன் நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்க எல்லோரும் உழைக்கவேண்டும்'' என்று குறிப்பிட்டார். நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### உசனில்

உசன் கிராம முன்னேற்றச்சங்க ஆதரவில் நடைபெற்ற சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்கு திரு. வ. நடராசா தலைமைவகித்தார். கூட்டத்தில் பலர் உரையாற்றினர். சுதந்திர தினத்தையொட்டி விளையாட்டுப் போட்டி ஒன்றும் நடாத்த பட்டது. துவிசக்கர ஓட்டப்போட்டி கைப்பந்தாட்டப்போட்டிகள் ஆகியன இடம்பெற்றன.

### மிருசுவிலில்

''கடந்த ஜனவரி 8-ந் திகதி தேசீய அரசாங்கம் நமக்கும் இந்த நாட்டில் உரிமைகள் இருக்கின்றன என்பதைஉணர்த்திவிட்டது. தேசீய அரசாங்கத்தை வாழ்த்துவதோடு நமது பரிபூரண ஒத்துழைப்பையும் அதற்கு நல்குகிருேம்'' என்று மிருசுவிலில் நடைபெற்ற சுதந்திரதின விழாவிற்குத்தலைமைவகித்த உசன் இரமநாதன் மகா வித்தியாலய உதவி அதிபர் திரு. க தம்பு பேசுகையில் கூறிஞர்.

இவ்வைபவத்தில் மாணவர்களின் நடனங்கள், நாடகங்கள் முதலிய கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### புலோலியில்

புலோலி சந்தா தோட்டத்தில் நடைபெற்ற சுதந்திரதினவிழாவை அப்பகுதி மக்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடினர். இவ்விழாவுக்கு யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. சுபாரத்தினம் தலைமை தாங்கிஞர்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைத்தினம், நகரசபைத் தலைவர் திரு. நடராசா, வடமராட்சி காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் உட்பட மற்றும் பலரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### குருமுனையில்

இலங்கையின் 18-வது சுதந்திரதின விழா இங்கு அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆலயங்களில் விசேட பூசையுடன் ஆரம்பமாகிய இவ்விழாவை அடுத்துகுருமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தேசீயக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது. பகல் நிகழ்ச்சிகளில் பாடசாலை மாணவ மாணவிகளின் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இரவில் பாடசாலைவளவில் அமைக்கப்பட்ட அலங்கார மேடையில் கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## பாராட்டு

திருமலை, திங்கள்

அரசாங்க எழுதுவினைஞர் சங்க திருக்கோணமலை கிளையின் விசேஷ பொதுக்கூட்டம் அண்மையில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பொழுது. கடந்த பல ஆண்டுகளாக திருக்கோணமலையில் மொழிவழித் தொழிற்சங்க வளர்ச்சிக்காக பாடுபடும் திரு. செ. சிவலிங்கம், திரு. மா. குலமணி திரு. க. கணேசன் ஆகியோருக்கு பாராட்டுதல் தெரிவிக்கப்பட்டது. புதிய கிளையின் செயலாளராக திரு. ஆர். பத்மநாதன் தெரிவுசெய்யப்பட்டார்.

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிராமசபையில் கடந்த 6ஆண்டுகள் பிரதமலிகிதராக கடமையாற்றிய திரு. வ. நடராசா அக்கரைப்பற்று தெற்கு கிராமசபைக்கு மார்ச் மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யம்பட்டுள்ளாரர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## அறிவித்தல்

மீசாலை வடக்கு ஆலடிப் புலமென்னும் காணிக்குள்ளிருக்கும் நடராச கந்தசாமி கோவிலில் தர்மகர்த்தா கூட்டம் வருகின்ற புதன்கிழமை (9-2-66) பிற்பகல் ஆறு மணியளவில் மேற்படி கோவில்மண்டபத்தில் நடைபெறும்.

இங்ஙனம்
க. மயில்வாகனம்
செயலாளர்.

1593

## பஸ் சேவையில் மாற்றம்

கச்சாய், திங்கள்

தென் யாழ்ப்பாண பஸ் பிரயாண சங்கத் தலைவர் திரு. சி. எம். எஸ் நாதனும், காரியதரிசி திரு. மு. கந்தையாவும், யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய பிரதேச முகாமையாளர் திரு. வேலுப்பிள்ளை, உதவி பிரதேச முகாமையாளர் திரு. வி. நாகரத்தினம் ஆகியோரை பேட்டி கண்டு பஸ் போக்குவரத்தில் செய்யவேண்டிய மாற்றங்கள் பற்றிப் பேசினர்.

கொடிகாமத்திலிருந்து காலை 7-10 மணிக்கு பாடசாலை சேவையாகச் செல்லும் பஸ் வண்டியில், சாவகச்சேரி வரை எல்லோரையும் ஏற்றிச் சென்று, அங்கிருந்து யாழ்ப்பாணம் வரை பாடசாலை மாணவர்களை மட்டும் ஏற்றிச் செல்லவும், காலை 8-10 மணிக்கு கொடிகாமத்திலிருந்து புறப்படும் பஸ் சாவகச்சேரி வரை பாடசாலை மாணவர்களை மட்டும் ஏற்றிச் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் வரை எல்லோரையும் ஏற்றிச் செல்லவும் ஒழுங்கு செய்யவேண்டும் என்று பேட்டியின்போது தெரிவிக்கப்பட்டது. இச் சேவைகள் பற்றி புள்ளி விபரங்கள் எடுத்து சீக்கிரம் சேவையில் மாற்றம் செய்வதாக முகாமையாளர் தெரிவித்தார்.

## இடமாற்றம்

ஊர்காவற்றுறை, திங்.

காரைநகர் கிழக்கு கிராம சேவகர் திரு. நா. திருநாவுக்கரசு இம்மாதம்தொடக்கம் மண்டைதீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மண்டைதீவுக் கிராம சேவகர் திரு. கதிர்காமநாதன் காரைநகர் கிழக்குக் கிராமசேவகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

மாதகல், திங்கள்

சென். தோமஸ் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாக சபையினர் வருமாறு:

தலைவர்: அ. லூயிஸ், உப தலைவர்: ம. இருதயநாதர், காரியதரிசி: கி. ம. நீற்றர், உபகாரியதரிசி: சி. அருட்பிரகாசம், தனாதிகாரி; ஆ. அன்ரெனி பெர்னாண்டோ. விளையாட்டுத்தலைவர்: ச. பா யோசேப், விளையாட்டு உப தலைவர்: ப. ஆனந்தராசா, நிலையப் பராமரிப்பாளர்: நீ. ஜோச் மரியதாஸ், உபநிலையப் பராமரிப்பாளர்: ஆ. இம்மனுவேல், கணக்குப்பரிசோதகர்: செ. அ. சேம்பர்லீன். நிர்வாக சபை அங்கத்தினராக தோ. செபஸ்தியாம்பிள்ளை, சீ. ஞானப்பிரகாசம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# எழுதுமட்டுவாள் கோஷ்டி வெற்றி பெற்றது

கொடிகாமம், திங்கள்

உசன் கிராமமுன்னேற்ற சங்கம் நடாத்திய சுதந்திர தினவிழா கொண்டாட்டத்தின்போது, எழுதுமட்டுவாள் கோஷ்டிக்கும் உசன் கோஷ்டிக்கும் நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப்போட்டியில் எழுதுமட்டுவாள்கோஷ்டி வெற்றியீட்டியது.

முதல் ஆட்டத்தில் உசன் கோஷ்டிக்கு 13 புள்ளிகள் இருந்தபோது, எழுதுமட்டுவாள் கோஷ்டி 4 புள்ளிகள் பெற்றிருந்தது. அதன்பின்னர் ஆட்டம் விறுவிறுப்படைந்து இரு கோஷ்டிகளும் சமமாகப் பதினன்கு புள்ளிகள் பெற்றன. இரு கோஷ்டிகளும் மிகவும் உற்சாகமாவும், உக்கிரமாகவும் விளையாடி 'டியூஸ்' ஆட்டத்தில் சுமார் 15 நிமிட நேரம் நிலைத்து நின்றன. ஈற்றில் எழுதுமட்டுவாள் கோஷ்டி வெற்றியீட்டியது.

இரண்டாம் ஆட்டத்தில் உஷன் கோஷ்டி தீவிரமாக விளையாடி எழுதுமட்டுவாள் கோஷ்டிக்கு 10 புள்ளிகள் இருந்தபோது வெற்றிபெற்றது.

கடைசி ஆட்டத்தில் இரு கோஷ்டிகளும் தீவிரமாக விளையாடின. மிகுந்த ஆவலைத் தூண்டும்வகையில் இந்த ஆட்டம் அமைந்திருந்தது. எழுதுமட்டுவாள் கோஷ்டி உசன்கோஷ்டியை 8 புள்ளிகளில் நிறுத்தி வெற்றியீட்டியது.

உசன் கோஷ்டியில் திருவாளர்கள் குணபாலசிங்கம், மகேந்திரராஜா, பேரம்பலம் ஆகியோரும் எழுதுமட்டுவாள் கோஷ்டியில் திருவாளர்கள் துரைசிங்கம், நடராசா, சின்னத்தம்பி ஆகியோரும் திறமையாக விளையாடினர்.

# "சமுதாயத் தொண்டர்களே உயர்ந்த சாதியினர்"

உடுப்பிட்டி, திங்.

"ஆங்கிலம் படித்தவர்களும் கறுப்புக் கோட் அணிந்துகொண்டு கோட்டுக்கும் போகிறவர்களும் தான் சமாதான நீதிபதிப் பட்டம் வேண்டும் என்ற காலம் மலையேறிவிட்டது. சமுதாயத்திற்காக உண்மையாக உழைக்கும் தொண்டர்களுக்குத்தான் பட்டங்கள் வழங்கப்படவேண்டும்" என்று இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கொற்றுவத்தை கிராமமுன்னேற்சங்கத் தலைவர் திரு. இ. சின்னத்தம்பிக்குச் சமாதான நீதிபதிப் பட்டம் கிடைத்தமை குறித்து பொலிகண்டி, சமரபாகு, கொற்றுவத்தைப் பொதுமக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் பேசுகையிற் கூறினார்.

வடமராட்சிப் பகுதிக்காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் தலைமையில் பொலிகண்டி வீரபத்திரர் கோவிலடியில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. மு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:—

இவ்வளவு காலமும் உயர்ந்தசாதி மக்களுக்கே பெரும்பாலும் சமாதான நீதிபதிப் பட்டம் கிடைத்துவந்தது. இதனால் தாழ்த்தப்பட்ட மக்களெனப்படுவோர் ஏதாவது கையெழுத்துக்கோ அல்லது நற்சாட்சிப் பத்திரத்திற்கோ அவர்களிடம் செல்வதானால் கைகட்டி வாய் புதைத்து அவரது வீட்டு வாசலிலேநின்று மிக நீண்ட நேரத்தின்பின்னரே ஒருவாறு அலுவலைப் பெற முடியும். சிலர் வேலை செய்து கொடுத்துக்கூட ஓர் கையெழுத்து வாங்கவேண்டிய நிலைமை ஏற்படும். ஆனல் சிறுபான்மை மக்களிலும் உண்மையான தொண்டர்களுக்குச் சமாதான நீதிபதிப் பட்டம் வழங்கினால் அந்த இன மக்களின் தேவைகள் சுலபமாக்கப் படுவதுடன் அவர்களும் சமுதாயத்தில் உயர்ந்ததர மக்களாக மதிக்கப்படக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதாக முடியும். சாதிகள் இன்று கிடையாது. சமுதாய நலனுக்காக உழைப்பவர்கள்தான் இன்று மேல் சாதியினர்".

வடமராட்சி கிராம முன்னேற்ற அதிகாரி திரு. கே. என். பி. நவரத்தினராசா பேசுகையில், "கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் ஒருவர் சமாதான நீதிபதிப் பட்டம் பெற்றமை குறித்து மிகவும் பெருமைப்படுகிறேன். சேவை உள்ளம் கொண்டவர்களைத்தான் நாடு போற்றும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்று கூறினர்.

திரு. க. சீனித்தம்பி பேசுகையில்' திரு. சின்னத்தம்பி ஓர் முற்போக்கு உள்ளம் படைத்தவர் என்று கூறினர்.

பருத்தித்துறை நகர சபைத்தலைவர் திரு. என். நடராசா பேசுகையில், சமுதாயம் முன்னேறிக் கொண்டே போகிறது. ராக்கெட்டும் அணுக்குண்டும் விடுகின்ற இந்த இருபதாம் நூற்றண்டிலும் சாதிகள் பார்த்து மனிதனை மனிதன் பிரித்து வைப்பது மிகவும் கேவலமான நிலையாகும்" என்று கூறினர்.

சமாதான நீதிபதி திரு. இ. சின்னத்தம்பி நன்றி தெரிவித்துப் பேசினர். ஆரம்பத்தில் அவர் கொற்றுவத்தை கிராமமுன்னேற்றச்சங்கத்திலிருந்து வீரபத்திர கோவிலடிக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். பலர் பாராட்டுரை வழங்கினர்.

## ஜி. ஜி. க்கு புகழ்மாலை

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஐக்கியநாடுகள் சபையில் இலங்கைத் தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்று நிகழ்த்திய சிறப்பான உரையினல் இலங்கையின் புகழ் உயர்த்தியிருக்கிறார் வெற்றிவாகை சூடி இங்கு வந்துள்ள திரு. ஜி. ஜி.யின் ஆலோசனைகளும் அனுபவமும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்ல சேவையாற்ற எனக்கு உதவியாக இருக்கும்" என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா மருதனமடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. ஜி. ஜி.க்கு புகழ் மாலை சூட்டினர்.

அரசாங்க அதிபர் தொடர்ந்து கூறியதாவது:

திரு. பொன்னம்பலத்தின் நீண்டகால அனுபவமும் அவருடைய ஒத்துழைப்பும் யாழ்ப்பாண மக்களுக்கு வெற்றிகரமான நல்ல சேவைகளைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை எனக்கு ஏற்படுத்துகிறது.

# வரி விளம்பரம்

## நன்றி நவிலல்

ஜனவரி மாதம் 27-ந் திகதி நடைபெற்ற எங்கள் திருமணத்தின்போது நேரில் வந்தும், வாழ்த்துக்கள் அனுப்பியும், பரிசில்கள் வழங்கியும் எங்களை மகிழ்வித்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். நவரத்தினராஜா தம்பதிகள், சத்திய வாசா, துன்னாலை தெற்கு, கரவெட்டி.

1894

## தேவை

ஹோட்டல் அனுபவமுள்ள "சர்வர்" தேவை. பாலன் மில்க்பார் கிளப், 119/6 கே. கே. எஸ். ரோட் (மைலன்ஸ் பஸ்ஸார்) யாழ்ப்பாணம் 1896

எமது தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. இம்மாதம் 10-ம் திகதிக்கு முன் நேரில் வரவும். பாஸ்கரன் இன்டஸ்றீஸ், 44/3, இந்துக் கல்லூரி ஒழுங்கை, (வசந்தா சேலை அச்சகத்திற்கு அருகாமையிலுள்ள ஒழுங்கை) நீர்வாவியடி, யாழ்ப்பாணம். 1876

சிறு பையன்கள் 12 - 15 வயது வைத்தியசாலைக்கு நேரில் வரவும். டாக்டர் வி. ரி. பர்னந்து, 11, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

1898

நாவலர்சந்திக்கும்தட்டா தெருச் சந்திக்கும்இடையில் K. K. S. வீதியில் அல்லது சமீபத்தில் 2அல்லது 3பரப்புக்காணியுடன் வீடு ஒன்று விலைக்குத் தேவை. கீழ்க்காண் விலாசத்துக்கு எழுத்தில் விண்ணப்பிக்கவும். S. S. பிள்ளை, த. பெ. இ. 17, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். 1889

## வாடகைக்கு

சகல நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு இல 28A பழம் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

1897

## அறிவித்தல்
### வைத்தியம்

நல்லூர் சட்டநாதர் வீதியில் 1-2-66-ல் திறக்கப்பட்டுள்ள பொதுசன வைத்தியசாலையில் நற்சாட்சிப் பத்திரங்கள். பரிசுகள் பெற்ற வைத்தியர் கா. நவரத்தினம், க. பரமானந்தம் முதலியோரைச் சந்தித்து எல்லாவிதமான நோய்களுக்கும் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம். நேரம் :- காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை மாலை 3 மணி தொடக்கம் 6 மணிவரை நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறலாம். 1892

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய யாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## கல்வி

மிகத்திறமையான விவேக மீட்டல் பாடங்கள் அளிக்கப்படுகின்றன. பி. ஏ. பொருளாதாரத் தத்துவங்கள், ஐரோப்பிய பொருளாதாரச் சரித்திரம், பிரயோக பொருளாதாரம். பிரதி ஒன்றிற்கு ரூபா 24/- தபால் செலவு 50 சதம், டிப்ளோமா பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகவியல், வர்த்தக எண்கணிதம். வர்த்தக புவியல். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி.

1867

## திறப்புவிழா

இலங்கைநாயகி அச்சகம் நல்லூர் மாக்கற்றுக்கருகாமையில் பருத்தித்துறை வீதியில் 28-1-66-ல் திறக்கப்பட்டது. ஓடர் வேலைகள் குறித்த தவணையில் திறமையாகச் செய்து கொடுக்கப்படும்.

1891

# 'தாலிக்கொடி' திருட்டுமுயற்சிவழக்கு: தீர்ப்பு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், திங்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த மரியான் செல்லத்துரை என்பவர் கடந்த வருடம் ஜூலை மாதம் 28-ந் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிஆசிரியையான திருமதி. ஆர் எம். இராமநாதன் என்பவருடையஆயிரத்து இருநூறு ரூபாய் பெறுமதியான தாலிக்கொடியை வழிப்பறி செய்யமுயற்சித்ததாக சங்கானைப் பொலிசார் குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ் எச். அத்துருபாலு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திருமதி இ. இராமநாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-சம்பவதினம் நான் கல்லூரியிலிருந்து மத்தியானச் சாப்பாட்டிற்காக வீடு நோக்கி ஒரு ஒழுங்கை வழியாகச் சென்றுகொண்டிருந்தேன். அச்சமயம் எதிரி எனக்கு எதிர்த் திசையிலிருந்து ஒரு சைக்கிளில் வந்தார். அவர் என்னைக் கடந்துசென்ற சில நிமிடங்களின்பின் எதிரி திரும்பி வந்து பின்பக்கத்தால் எனது தாலிக்கொடியை இழுத்தார். நான் சத்தமிடவே எதிரி ஓடிவிட்டார். நான் வீட்டிற்கு வந்ததும் இச்சம்பவத்தை மகனிடம் கூறினேன். அவர் கிராம சேவையாளரிடம் முறையிடச்சென்றுவிட்டார். சிறிது நேரத்தில் எதிரிவந்து வேலியால் எட்டிப்பார்த்தார். அச்சமயம் கிராமசேவகர் வீட்டிற்குச்சென்ற எனது மகன் திரும்பி வந்துகொண்டிருக்கையில் நான் சத்தமிட்டேன். நான் சத்தமிட்டதைத்தொடர்ந்து மகனும் மற்றவர்களும் எதிரியைப் பிடித்துவிட்டார்கள். அச்சமயம் கிராமசேவகர் அவ்விடம் வரவே எதிரியை சங்கானைப்பொலிசில் கொண்டு போய் ஒப்படைத்தார்கள்.

வட்டுக்கோட்டைக்கிராம சேவகர், சங்கானைப் பொலிஸ் சார்ஜன் திரு. சின்னையா, வழக்காளியின் மகன் ரவீந்திரகுமார், எதிரியான மரியான் செல்லத்துரைஆகியோர் சாட்சியமளித்த பின்னர் நீதிபதிஎதிரியைக்குற்றவாளியாகக்கண்டு எதிரியின் கைவிரல் அடையாளங்களை எடுக்க உத்தரவிட்டு எதிரிக்குத் தண்டனை விதிப்பதாக வழக்கை ஒத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளருக்கு தொழிற்சங்கக் கல்வி

## ஐ. நா. நிபுணரின் உதவியோடு இ. தொ. கா. ஆரம்பித்துள்ளது

தொழிலாளர் மத்தியில் தொழிற்சங்கக் கல்வியைப் பரப்பும் ஒரு புதுப் பணியையும் இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் இப்போது மேற்கொண்டிருக்கின்றது. இதற்காக இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் தொழிற்சங்க கல்வி இலாகா ஒன்றை தனியாக ஏற்படுத்தி அதற்கு அதிபராக முன்னை நிர்வாகக் காரியதரிசியாக இருந்த திரு. எஸ். செல்லையாவை நியமித்திருக்கின்றது.

திரு. செல்லையா இந்தப் பொறுப்பை மேற்கொள்வதற்கு முன்னதாக சர்வதேசத் தொழில் ஸ்தாபனத்தின் உபகாரச் சம்பளம் பெற்று ஜெனிவா, இங்கிலாந்து, அயர்லாந்து முதலிய தேசங்களில் தொழிற்சங்கக்கல்வி பயின்று திரும்பினார்.

இந்தத் துறையில் இ. தொ. காங்கிரசிற்கு ஆலோசனைகள் கூறி உதவும் வகையில் ஐ. நா.வின் ஒரு அங்கமான சர்வதேசத் தொழில் ஸ்தாபனம் கனடா தேசத்தவரும் தொழிற்சங்கக் கல்வி நிபுணருமான திரு. ஜே. வி. மொரின் என்பவரை அனுப்பி வைத்துள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வேண்டுகோளின் பேரில் இலங்கை அரசாங்கத்தின் அனுமதியோடுதான் இந்த நிபுணர் இலங்கை வந்துள்ளார்.

திரு. மொரின் கனேடிய பொது ஊழியர் சங்கத்தின் குவபெக் கவுன்சிலின் தொழிலாளர் கல்வி டைரக்டராக இருந்து வருகின்றார். இவர் மேற்கு ஆபிரிக்காவிலுள்ள சினிகல் நகரில் சர்வதேசத் தொழில் ஸ்தாபனத்தின் நிபுணராக சில வருடங்களுக்குமுன் கடமையாற்றியுள்ளார். கனடாவில் மொன்ட்ரியல் நகரைத் தாயகமாகக் கொண்ட இவர், அங்குள்ள சர்வகலாசாலையில் சமூகவியல் துறையில் படித்துப் பட்டம் பெற்றவர்.

இ. தொ. கா. ஆரம்பித்து நடத்தி வரும் தொழிற்சங்கக் கல்வி வகுப்புகளுக்கு வேண்டிய ஆலோசனைகளை தெரிவிப்பதோடு மட்டுமின்றி சர்வதேசத் தொழில் ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளை பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தி வருகிறார்.

சமீபத்தில் இ. தொ. கா. மாவட்டத் தலைவருக்கான கல்வி கருத்தரங்கமும், மாவட்ட வாலிபர் காங்கிரஸ் தலைவருக்கான கல்வி கருத்தரங்கமும், மாதர் சேவா சங்கத் தலைவிகளுக்கான கல்வி கருத்தரங்கமும் கொழும்பில் நடைபெற்று முடிந்துள்ளன. இந்தக் கருத்தரங்கங்களில் கலந்து கொண்டு திரும்பியுள்ள அனேகர் தாம் புதுப் புது விஷயங்களைத் தெரிந்து கொண்டிருப்பதாகவும் தோட்டப்பகுதியில் புதிய விழிப்பை ஏற்படுத்த இவை தமக்குப் பெரிதும் உதவும் உதவும் என்றும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

கொழும்பில் நடைபெற்ற தொழிலாளர் கருத்தரங்கங்களில் இ. தொ. கா. தலைவர்கள் மட்டுமின்றி வெளிப் பிரமுகர்கள் பலரும் விரிவுரைகள் நிகழ்த்திச் சென்றார்கள். அவர்களில் தொழில் அதிபர் லிங்கன் அபயவீர, அரசாங்க சேவை லிகிதர் சங்கத்தைச் சேர்ந்த திரு. எம். விஜயசிங்கம், ஆசியா பவுண்டேஷன் டைரக்டர் திரு. ஜேம்ஸ் எச். நொய்ஸ், தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தைச் சேர்ந்த திரு விஜயமான ஆகியவர்களைக் குறிப்பிடலாம். இந்த மாதிரி தொழிலாளர் கல்விக் கருத்தரங்கினை மாவட்டங்கள் தோறும் நடத்துவதற்கு இ. தொ. கா. ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

## திருமண அழைப்பு

செல்வநாயகம் — சரோஜினி

நிகழும் விசுவாவசு ஆண்டு தை மாதம் 28-ம் நாள் வியாழக்கிழமையின்னிரவு 3-39-6-34 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் (11-2-66) திருநிறைசெல்வன் செல்வநாயகம் அவர்களுக்கும் (ஆசிரியர் சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை) திருநிறைசெல்வி சரோஜினி அவர்களுக்கும் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் சந்நிதியில் நிகழும் திருமண வைபவத்திற்கு நண்பர்கள், உறவினர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

செ. இராசையாவும் (ஆசிரியர்) பாரியாரும், ஏழாலை வடக்கு, சுன்னாகம், இ. பொன்னுத்துரையும் (ஆசிரியர்) பாரியாரும், இணுவில் தெற்கு, சுன்னாகம். 1872

## நன்றி நவிலல்

சென்ற வெள்ளிக்கிழமை (4-2-66) காலஞ் சென்ற மூ. செல்லையாவின் மரணச் சடங்குகளில் பங்கு பற்றிய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம். செ. காசி பிள்ளை, (பங்காளர்: ஆ. அப்பையா அன்கோ), செ. பொன்னுத்துரை, (உரிமையாளர்: மகாத்மா ஜவுளி மாளிகை), கே. செல்லத்துரை (இருஷிக இலாகா களஞ்சிய பாதுகாவலர், பரந்தன்), "இராமகிருஷ்ண பவனம்", கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 1899

## விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள ஆஸ்டின் A-55 கார் விற்பனைக்குண்டு. 1 ஸ்ரீ 7600 தொடர் இலக்கம். விலை ரூ. 18250/- பார்வையிடவும். 105, பேங்ஷால் வீதி, கொழும்பு-11 டெலிபோன்: 7643. 1895

# "நம்பிக்கை வீணாகவில்லை"

ஊர்காவற்றுறை, திங்.

"சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கத்தக்க வகையில் இலங்கை அரசியல் சாசனம் செய்யப்படவேண்டும்" என்று வேலணை மத்திய கல்லூரி முன்றலில் நடைபெற்ற தீவுப்பகுதி சுதந்திரதின விழாவுக்குத் தலைமை வகித்துப்பேசுகையில், தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் கூறினார்.

தீவுப்பகுதிக் காரியாதிகாரியாலும், கிராமசேவகர்களாலும் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தவிழாவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபரும், வேலணை மத்திய கல்லூரி அதிபரும், வேலணை கி. ச. தலைவரும் கலந்து கொண்டனர்.

திரு. நவரத்தினம் மேலும் பேசியதாவது: "தமிழ்பேசும் மக்கள் ஒற்றுமையை விரும்புகிறார்கள். நாடுபிரிப்பதை அவர்கள் விரும்பவில்லை. இந்நாடு எல்லோருக்கும் பொதுவானது. எமது உரிமை முழுவதும் கிடைத்துவிடவில்லை. தேசிய அரசாங்கத்தில் நாம் வைத்த நம்பிக்கை வீண்போகாது. 1956-ல் தன்மானம் இழந்த நாம் இன்று மானத்தைக் காப்பாற்றக்கூடிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பேச்சளவில், எழுத்தளவில் தருவதாக உறுதி மொழி கொடுத்தார்கள் ஆட்சியாளர். செயலில் உறுதிமொழி நடக்கவில்லை. இன்று செயல்வீரர் திரு டட்லியின் அரசாங்கம் தமிழ்மக்களை நல்லநோக்குடன் பார்க்கிறது. இந்த அரசாங்கத்திற்கு எமது ஒத்துழைப்பைக் கொடுக்கிறோம். மேலும் கொடுப்போம்."

# 'அரசியல்கட்சியின் கட்டுப்பாட்டில் தொழிற்சங்கம் இயங்கக்கூடாது

திருகோணமலை, திங்கள்

அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டில் தொழிற்சங்கங்கள் இயங்கக்கூடாது. குறிப்பிட்ட ஒரு அரசியல்கட்சியின் ஆதிக்கத்தில் இருந்து வந்த தொழிற்சங்கங்கள் தாங்கள் வலியுறுத்தி வந்த கோரிக்கைகளை கைவிடும் சூழ்நிலை ஏற்படுகின்றது. கூட்டரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து தொழிற்சங்கங்கள் வற்புறுத்தி வந்த 21 கோரிக்கைகளுக்கும் இந்தக்கதிதான் ஏற்பட்டது என்பதையும் மறந்துவிடக்கூடாது" என்று அஞ்சல் தொலைதொடர்பு சேவையாளர் சங்கத் திருமலைக் கிளையின் ஆரம்பக்கூட்டத்தில் கிளைச் செயலாளர் திரு. செ. பாலசிங்கம் பேசுகையில் கூறினார். கூட்டத்திற்கு திருகோணமலை பிரதம தபால் நிலைய அதிபர் திரு. எஸ். நாகநாதன் தலைமை தாங்கினார்.

மாத்தறை, காலி, அனுராதபுரம், யாழ்ப்பாணம், கொழும்பு, கேகாலை, புத்தளம் ஆகிய பகுதிகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: எஸ். சிவலோகசுந்தரம், செயலாளர்; செ. பாலசிங்கம், உபதலைவர்கள்; வி. ரி. குமாரசாமி, இ. எஸ். தியாகராசா. 10 பேர் கொண்ட கமிட்டி தெரிவானது.

தாய்ச்சங்க வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமுகமாக 10 பேர் கொண்ட தூதுக்குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது. தாய்ச் செயலாளர் எச். சி. வி. யோசப், பொருளாளர் எல். ஜி. டி. விக்ரமசிங்ஹ உட்படப்பலர் உரையாற்றினர்.

## கிளிநொச்சியில் பணம்பறிக்கும்கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள இந்திய வம்சாவளி மக்களை, அவர்களுக்கு பிரஜா உரிமை எடுத்துத் தருவதாகக் கூறி பணம் பறிக்கும் முயற்சியில் பல கோஷ்டி இயங்கிவருவதாக அறியப்படுகிறது.

இந்திய வம்சாவளியினரான ஏழைத்தொழிலாளர் பலரிடம் சென்று அவர்களுக்கு இலங்கையில் பிரஜா உரிமைபெற்றுத்தருவதாகக் கூறி, பலரிடம் இவ்விதம் விபரம் எடுத்து வருவதாகப் பொய்யான பெயர் பட்டியல்களையும், தஸ்தாவேஜுகளையும் காட்டி அவர்கள் பெயரையும் தங்கள் பெயரில் சேர்த்துக் கொண்டு பணம் பறித்து மோசடி செய்து வருகிறார்கள் விஷயம் தெரியாத பாமர மக்கள் இவர்கள் வலையில் சிக்குண்டு தங்கள்பணத்தைப் பறிகொடுக்கிறார்கள்.

பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்குமாறுவர்த்தமானி அறிவித்தல் வந்தபின்னரே தனிப்பட்ட முறையிலேயே பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாவலர் சந்தி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது எதிரிசார்பில் அட்வக்கேட் திரு ரி கணேசலிங்கம், புறக்டர் வி செல்லத்துரையின் அனுசரணையுடன் ஆஜரானார். 2-ம் 3-ம் எதிரிகள் சார்பில் அட்வக்கேட் திரு. ரி கணேசலிங்கம், புறக்டர் ஆர். விஸ்வநாதன் அனுசரணையுடனும் ஆஜரானார். வழக்காளிதரப்பில் அட்வக்கேட் திரு கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் திரு. தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடன் இன்ஸ்பெக்டர் எம். சகாயத்திற்கு உதவியாக இருந்தார்.

காலஞ்சென்ற செய்வேந்திரத்தின் சடலத்தை 65-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ந் தேதி பிரேத பரிசோதனை செய்ததாகடாக்டர் மேலும் தெரிவித்தார்.

விசாரணையைப் பார்ப்பதற்கு கோட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். மேல்விசாரணை இம்மாதம் 21-ந் தேதிவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## செயற்குழு மீது அவநம்பிக்கை

திருகோணமலை, ஞாயிறு

அரசாங்கலிகிதர் சேவைச் சங்கமத்திய செயற்குழுவின் மீது நம்பிக்கையின்மை தெரிவிக்கும் பிரேரணை மேற்படி சங்கத் திருக்கோணமலைக் கிளையின் விசேட பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட ஏனையபிரேரணைகள் வருமாறு;

தாய்ச் சங்க நிர்வாகிகளின் நடவடிக்கைகளுக்கு மாறாக அதிருப்தி கொண்ட உறுப்பினர்கள் சங்கத்தில் இருந்து விலகுவதற்கு சமர்ப்பித்துள்ள இராஜினமாப் பத்திரங்களை வாபஸ் வாங்குமாறு இக்கிளை வேண்டுவதுடன் ஜன 8-ந்திகதி வேலைநிறுத்தத்திற்கு காரணமாகவிருந்த சங்க நிர்வாகிகளை சங்கத்திலிருந்து வெளியேற்ற எல்லா உறுப்பினர்களும் பாடுபடவேண்டும். சங்கத்தின் ஒற்றுமையைக் குலைத்து பிளவையுண்டு பண்ண முயலுகின்ற அரசியல் வாதிகளின் கைப்பொம்மைகளாக இருக்கின்ற தாய்ச் சங்க நிர்வாகிகளின் மேல் இக்கிளை தனது பலத்த கண்டனத்தை தெரிவிக்கின்றது.

சங்க நிதியை தாய்ச்சங்க நிர்வாகிகள் தங்களின் இலக்கை அடைவதற்கான, சங்கக்கொள்கைக்கு மாறான முறையில் செலவழிக்க முயல்வதைத் தடுத்து நிறுத்துவதற்கு சங்க உறுப்பினர்கள் எல்லாரும் உஷாராக இருக்க வேண்டுமென இக்கிளை தீர்மானித்திருக்கிறது.

## கிளர்ச்சி கைவிடப்பட்டது

திருவனந்தபுரம், பெப். 7

கூப்பனுக்கு வழங்கப்படும் அரிசி போதாதென அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் கேரளத்தில் மாணவர்கள் நடத்தி வந்த கிளர்ச்சியை கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கேரள மாணவர்கள் சங்கத்தினர் புதிய கவர்னர் திரு பகவான் சகாயிடம் தாம் கிளர்ச்சியைக் கைவிட்டுள்ளதாக இன்று தெரிவித்தனர்.

இன்று திருவனந்தபுரத்தில் பல கல்லூரிகள் திறக்கப்பட்டன. பல்கலைக்கழகங்கள் திறக்கப்படவில்லை.

## இந்திராவின் அமெரிக்க விஜயம்

புதுடில்லி, பெப். 7

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி அடுத்த மாதம் நடுப்பகுதியில் அமெரிக்காவுக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்வார்.

புளியம பொக்கணை

# நாகதம்பிரான் கோயில் பாதை சிரமதானம் மூலம் அமைக்கப்படும்

கச்சாய், திங்கள்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயிலுக்கு செல்லும் சுமார் 2 மைல் தூரமான பாதையை சிரமதானமூலம் அமைக்கும் வேலை 10-ம் தேதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். இப் பணியில் சுமார் 2000 தொண்டர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

உள்ளூரைச் சேர்ந்த தொண்டர்கள் முதலில் பாதைஅமைக்கும் வேலையை ஆரம்பிப்பார்கள். வெளியூரிலிருந்து வரும் தொண்டர்கள் பின் கலந்து கொள்வார்கள். நாகதம்பிரான் கோவில் மைதானத்திலிருந்து பாதை அமைக்கும் வேலை ஆரம்பமாகும். கரைச்சிப் பிரிவு காரியாதிகாரி திரு. ஏச். ஈ. பிள்ளைநாயகம் குத்துவிளக்கேற்றி சிரமதான விழவை ஆரம்பித்துவைப்பார்.

கரைச்சி கிராம சங்கத் தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி பாதை அமைக்கும் வேலைகளை ஆரம்பித்துவைப்பார். வியாழக்கிழமை காலை காலை 5மணிமுதல் மாலை 6 மணி வரையும் வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் மாலை 5 மணி வரையும், பாதை அமைக்கும் வேலை நடைபெறும்.

ஒவ்வொரு தொண்டரும் மண்வெட்டி கூடை முதலிய ஆயுதங்களுடன் சமுகம் தரும்படி கேட்கப் பட்டிருக்கின்றனர். சிரமதான தொண்டர்களை திருவாளர்கள் எம். சண்முகம், ஆர். ரி. சுப்பிரமணியம், எஸ். எஸ். சின்னத்தம்பி, திருமதி வே. சிவபாக்கியம், செல்வி க. பரமேஸ்வரி ஆகியோர் வரவேற்பார்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலே வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org